உ

ஓம்

கணபதி துணை.

குருவே நம

# அவதூத சம்வாதம்.

## இருபத்துநான்கு குருவையுரைத்த அத்யாயம்

மூலமுமுரையும்

இம்மூலம்

## வியாசமகாரிஷியினாலே

அருளிச்செய்யப்பட்ட பாகவதம்

இவ்வுரைசெய்தவர் திருச்சிரபுரம்

## தாயுமானஸ்வாமிகள்

பரம்பரைக்குரிய அன்னப்பன்பேட்டை

அம்பலவாணஸ்வாமிகள்

மாணாக்கராகிய எடுத்துக்கட்டி

## அருணாசல நாயனார்

இஃது

## ஜா-மூர்த்திராஜா

கேட்டுக்கொண்டபடி

வித்வரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

(குருவே நம.)

மனவிகற்பமகற் றுனருள் ஞானந.....*
புனிதவானந்தபோ தனையேற் றுவாந். *
துனி நிறைபவ தூ தசம்வாத நூற்.....*
கினியெ ஞானின் றிய லுரை செய்யவே. *

அளி நிறைந்தவறிவின் பெருமையே.. *
யொளிகொண் மானிட னுருக்காட்டி நற்.
களிமறை சைவந் தென்னையெனக் களித்
தெளிமை தீர்த்தவி பல்பினையேற் றுவாம் *

## ஸ்ரீகுருவே நம:

## பாகவதத்தில் அவதூதசம்வாதம்.

## இருபத்துநான்கு குருவையுரைத்த அத்தியாயம்.

### இதன்வரலாறு

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வைகுந்தத்திற்கெழுந்தருள எத்தனமான காலத்தில் உத்தவனென்பவர் மிகவுமனோவிதனங் கொண்டவராய்க் கண்ணனது திருவடிகளில் வணங்கி ஒடுக்கவணக்கத்துட னின்றுகொண்டு ஒப்புருஷோத்தமா-சகலஜீவதயாபரா- மர்யாதீதவல்லபா. தேவரீர் திருவடிகளைப்பிரிந்துயானெவ்வாறுய்வேனென்று முறையிட்டபோது ஸ்வாமி திருவுளமிரங்கி ஞானோபதேசஞ் செய்து அவ்வுபதேசம் நிலைபெறப் போதிக்குங் காலையில் வாரும்பிள்ளாய் - உத்தவா உன்னறிவினையே யுனக்குக்குருவாகக்கொண்டு-நற்புத்தியினாலே துற்புத்தியைசிட்சித்து-நீயே நானாகவும் - நானே நீயாகவும்- நீயே நீயாகவுந்தெளிந்தறிகவென்று திருவாய் மலர்ந்தருள அப்போது உத்தவர் அடியேனெவ்வாறு தெளிவுபெறுவேனென நமக்குப்பதினான்காவதுபாட்டன் - எதுமகாராஜன் அரசு

செலுத்துங்காலத்தில்நடந்த - அவதூதசம்
வாதமென்றொருகதையுண்டென்றதனைக்கே
ளென உத்தவர்க்குத் திருவாய் மலர்ந்தருளி
யது.......................................*

(தெத்தாத்திரையமுனிவனா)

(எதுமகாராஜன்வினுதல்.)

தீதிலன்மகிழுந்தெத்தாத்திரையனென்றுல
கமெல்லாம்ஓதவதூதவேடத்தொருவனையெ
துமுன்கண்டு, நீதிசெய்யறம்பொன்காம நி
னைந்திலை சிறிதுமின்பம், எதிலடைகின்றா
ய்நீயெனமுனியிசைக்கலுற்றான்..........*

(இதன்பொருள்.)

தீதிலன் - குற்றமில்லாதவனாகி
மகிழும் - மகிழ்ச்சியையடையும்
தெத்தாத்திரையனென்று - தெத்தாத்திரைய முனிவனென்று(ம்
உலகமெல்லாம் - பெரியோர்களெல்லா
ஓதும் - சொல்லுகின்ற
அவதூதவேடத்து - திகம்பரவுருவத்தினையுடைய
ஒருவனை - ஒருமகாபுருஷனை
எதுமுன்கண்டு - எதுமகாராஜன் தனக்குமுன்பாகக்கண்டு

| | |
|---|---|
| நீதிசெய்பறம்- | வழுவாதுசெய்யும்ஆசிரமதருமத்தையும் |
| பொன்காமம்- | பொன்முதலியவற்றிற் செலுத்தும்ஆசை மூன்றினையும் |
| சிறிதும்நினைந்திலை- | கொஞ்சமேனும் நினைக்கவில்லை |
| இன்பம்நீ- | பேரின்பத்தைநீர் |
| ஏதினிலடைகின்றாயென- | எதனாற்பெற்றுக் கொண்டீரென்றுகேட்க |
| முனியிசைக்கலுற்றார். | தெத்தாத்திரேய முனிவர்சொல்லுகின்றார்- |

(அவதாரிகை.) (எ-று)

தாமடைந்த பேரானந்த மிவற்றாற் பெற்றதெனத் தொகுத்துக்கூறியது.

தரைபுனல்கனல்கால்வானந்தபனன் வெண்டிங்கள்வாரி, வரையுறைபரவுமான்கான் வருகரிபதங்கமீன, முரலளிகணையெய்கின்றோன் மொழிதருங்குமரிதேவி, யுரைதருபுறவுதாசி நூன்கவரன்றிறைகம்.................................❋

(இதன்பொருள்.)

| | |
|---|---|
| தரை- | பூமி |
| புனல்- | நீர் |

கனல்- நெருப்பு...
கால்- வாயு
வானம்- ஆகாயம்
தபனன்- சூரியன்
வெண்டிங்கள்- சந்திரன்
வாரி- சமுத்திரம்
வளையுறையரவு- மலைப்பாம்பு
மான்- மான்
கான்வருகரி- காட்டானை
பதங்கம்- விட்டிற்பறவை
மீனம்- மீன்
முரலளி- வண்டு
கணைபெய்கின்றோன்-வேடன்... ... ...
மொழிதருங்குமரி- கன்னிகைப்பெண்
தேனீ- தேன்வண்டு
உளாதருபுறவு- புறா
தாசி- விலைமாது
உளங்கவரன்றில்- தசைக வருமோர் பற வை
நாகம்- பாம்பு (எ-று) உ

(இதுவுமது)

உறைந்த நூற்சிலம்பிமைந்தரூது வண்டெ டுத்தகீடஞ், சிறந்தனவிவை நாலாறுஞ் சிந்

# அவதூதசம்வாதம்.

தையிற்குருவென்றாக்கி, மறந்தருமவைகடீ
தாமற்றவை நலனுமென்றிங், கறிந்தனனின்
பமுற்றேனவ்வவையரசகேண்மோ... ...*

(இதன்பொருள்)

உறைந்த நூற் சிலம்பி - சிலந்திப்பூச்சி
மைந்தர் - குழந்தை
ஊதுவண்டெடுத்தகீடம் - ஒலித்தலைச்செய்யும் வண்டெடுத்தபுழு
சிறந்தனவிவைநாலாறும் - சிறப்பினையுடையஇவ்விருபத்துநான்கையுஞ்
சிந்தையிற்குருவென்றாக்கி - எனது கருத்துக்குட் குருவாகக்கொண்டு
மறந்தருமவைகடாம் - பொல்லாங்கைத் தருகின்றவைகடாமென்றும்
மற்றவைநலனுமென்றும் - ஒழிந்த தீங்கில்லாதவைகணன்காமென்றும்
இங்கறிந்தனன் - இவையிடமாக அறிந்து
இன்பமுற்றேன் - பேரின்பத்தைப் பெற்றேன்

அவ்வகை- யான்பெற்றவகையை
அரசகேள்மோ- எதுமாராஜனே கே
ளும்—(எ-று)

(இதன்றாற்பரியம்)

பூமிமுதற்புகழிலீருக்கச்சொல்லிய விருபத்து
நான்கினுமுள்ளநற்குணங்கள் குருவாயின
வென்றும், அவைகளாற்றானின்பம் பெற்றவ
கையையுணாக்குதுமென்றுஞ்சொல்லியதாம்

(அவதாரிகை) (கூ

பூமியின குணத்தால்.
அறிகின்றவைஇவையெனல்.

பரிவில்வெட்டினுங்கல்லினும்பயன்பொறுத்
தளித்தும், புரியுநல்லகைமாறெதிர் பொருந்
திடாதசலத், தருவிநீரடவிக்கனிமுதலியவளி
த்து, மிருதிறத்தையு மெனக்கறிவித்தநித்த
ரையே............................................*

(இதன்பொருள்.)

பரிவில்வெட்டினும்- அன்பில்லாது வெட்டி
ப்பிளந்தாலும்........
கல்லினும்பொறுத்து-தோண்டிஞ்சகித்
துக்கொண்டு........
பயனளித்தும்- தன்னுலாகியபலன்க
ளைக்கொடுத்தும்.....

அசலத்தருவி நீர் - மலைகளினின்றுவரா நின்ற அருவிசலங்களாலும்... ... ...

அடவிக்கனி முதலிய - வனங்களிலுண்டாகின்றகனிமுதலியவற்றாலும்... ... ... ... ...

எதிர்பொருந்திடாது - பதிலுபகாரத்தை விரும்பாது... ... ...

அளித்தும் - இரட்சித்தும்... ...

நல்லவைமாறு - நன்மையான வுபகாரங்களை... ... ...

புரியும் - - - - செய்துகொண்டு வரும்... ... ... ... ...

இருதிறத்தையும் - தனக்குப்பிறர் செய்யுந் தீங்கைச்சகித்தலும் அவர்களுக்குதவலுமாகிய - இவ்விரண்டு குணத்தையும்... ... ...

எனக்கறிவித்தது - எமக்கறியச்செய்தது.

இத்தரையே - இந்தப்பூமி (எ-று) (ஏகாரம் அசைநிலை.)

(இதன்றாற்பரியம்.)

தனக்குச் செய்கின்ற பொல்லாங்குகளை

யெல்லர்ஞ் சகித்துக்கோடலும் - தான்கை மாறுவேண்டாது பிறர்க்குப்பயன் படுதலு ம் ஆகிய விவ்விரண்டுகுணத்தையும் பூமியா லடைந்தேனென்பதாம்...... ..........(ச)

மருதநிலம் - குறிஞ்சிநிலம் - முல்லை நிலம் - பயன்படுமாறும் - கூறியது.

(அவதாரிகை)

(நீரின துகுணத்தாலறிகின்றவை)

(இவையெனல்)

நளிகொளும்முரு நினைக்கினுங் காண்கினு நல ஞ்சேர்ந், தொளிகொளும்பெயர்வழுத்தினு மன்னவருளத்தை, யளிகொளும்புனிதம்பெ றவாக்கலுமருந்தன், டெளிவுமப்புவினிடத் தினின்றறிந்தனன்றெரிக்கில்...............*

(இதன்பொருள்)

நளிகொளும்- குளிர்ச்சியைக்கொண் டிருக்கும்... ... ...*

உரு நினைக்கினும்- வடிவத்தினைச் சிந்திக்கி னும்... ... ...*

காண்கினும்— — தரிசிக்கினும்... ... *

நலஞ்சேர்ந்து- நன்மைகளெல்லா *
மொன்ருகி... ...*

ஒளிகொளும்பெயர்- பிரகாசம்பெற்ற நாம

| | |
|---|---|
| | த்தை... ... ...* |
| வழுத்தினும்- | துதிக்கினும்... ...* |
| அன்னவருளத்தை- | அவர்களதுமனதை..* |
| அளிகொளும்- | அன்பினைக் கொண்டிரு |
| | ரா நின்ற.............* |
| புனிதம்பெறவாக்க | பரிசுத்தத்தை யடைய |
| லும்- | ச்செய்தலும்... ...* |
| அருந்தண்- - - | அரியகுளிர்ச்சி யினை |
| | யும்... ... ...* |
| தெளிவும்- - - | தெளிவையும்... ...* |
| அப்புவினிடத்தினி | நீரினிடத்திலேயிருந்து |
| ன்று- —— —— | |
| அறிந்தனன்—— | —— அறிந்துகொண்டனன் |
| தெரிக்கில்—— | —— சொல்லுமிடத்து[எறு |

(இதன்ருற்பரியம்)

தியானித்தவர்- தரிசித்தவர்- துதித்தவர்- இவர்களுடைய உட்புறம்பைச் சுத்தஞ்செய்தும்- மலினந்தாக்காது அந்நீர் தெளிவுற்றிருத்தல்போல் தன்னையொருவர் நினைப்பினும்காண்கினும் துதிக்கினும் அவர்புனிதராகுவது மன்றித் தானுமந்நிலையி னின்றுங்கெடாததென்பதாம்...... ......... ......(ரு)

(அவதாரிகை.)

ளுகின்ற துர்க்கந் தத்தி
னும்... ... ... *
பேடியளைந்துவந் பொருந்தும்படி யாக
தும்— — — —க்கலந்துவந்தாலும். *
அக்குணம்பெறு——அந்தக் குணத்தைப்
பொருந்தாத... ... *
அநிலனென்று— —வாயுவென்று... ... *
அறிந்தேன்— — —அறிந்துகொண்டனன்
(அதுபோலவே)
வளைந்த— — —சூழ்ந்த...... ... ...*
காதல்— — — —இச்சையால்........*
எவ்விருப்படைந்தா எப்பொருளினுமாசை
ரென— - — —யுடையவனைப் போல
வே...... ... ... ...*
வரினும் —- - — —வந்தாலும்.........*
தெளிந்தயோகியர் —அறிவுமயமா யிருக்கி
ன்ற யோகியாது....*
உயிர்க்கு— — —ஆத்மாவுக்கும்.....*
அவையில்லென ——அவ்வாசை யில்லையெ
ன்று .... ... ... ...*
தெரிந்தேன் — —எனதறிவிற்குப் புலப்
படத்தெளிவுற்றனன்.
(இதன் ரூற்பரியம்.) (எ-று.)

நார்க்கந்த துர்க்கந்தங்களிற் கலந்துவரினும், அக்குணம்வாயுக்கின்மைபோல் - அறிவுடையோரொவற்றிற் கலந்திருப்பினும், அவையவைகளாட்பற்றுதென வறிந்தே னென்பதாம்(எ)

(அவதாரிகை.)

(ஆகாயத்தாலறிகின்றவையிவையெனல்)

கண்ணகன்றிடு மிடத்துள்வான் கடத்துள்வா
னெனவான், எண்ணநின்றன போகவொன்
றுயிரைந்ததனுற், பண்ணுகின்றதன்மாயை
யிற் பற்பலபடைப்பாய், நண்ணுகின்றதும்
பிரமமொன் றென்றுநன் கறிந்தேன்... *

(இதன்பொருள்)

கண்ணகன்றிடும் — இடமகன்றிரானின்ற *
இடத்துள் — — இடங்களெல்லா நிறைந்த...... ... ... ... *
வான் — — — மகாஆகாயமும்... *
கடத்துள்வான் — — குடத்துளிருக் கின்ற கடாகாயமும்... ... *
என — — — — என்று...... ... *
வான் — — ஆகாயங்கள்... ... *
எண்ணநின்றன — — ஒன்றிரண்டென்றெண்ணநின்றன... ....*
போக — — — அக்கடம் நசித்துப்

போமாயின்... ... *
ஒன்றாய்— —அவையேகமாய்... .*
இயைந்ததனாற்— —பொருந்திய படியால்
அதுவே...... ... *
பிரமம்—— —சைதன்யம்.. ... *
பண்ணுகின்றன — —எல்லாவற்றையும் உண்
டாக்குகின்ற... ... *
தன்மாயையின்— —தன்துமாயாசத்திகளா
லே... ... ... *
பற்பலபடைப்பாய்—பலபலஸிருட்டிகளாகி
யும்..... ... *
நண்ணுகின்றதும் —அவற்றுட் பொருந்தி
யிருக்கின்றதும்... *
ஒன்றென்று— — —அப்பிரம மொன்றெ
ன்றே...... ...*
நன்கறிந்தேன்— —யான்நன்கு யறிந்து
கொண்டனன். (எ-று)

(இதன்றாற்பரியம்.)

கடம்நசிக்கக்கடாகாயமகா காயமானவாறு போல, மாயாதேகம்நசிக்கில் கூடஸ்தனும் பிரமமுமேக, மாவதை ஆகாயத்தாலறிந்த னமினன்பதாம்... .... ..... ... அ

(அவதாரிகை)

இதுவுமது.

உறைவுறாவிடமின்றென வுறையும்வா னொன்
றாற், குறைவுறாவகைகண்டதிற்கூறு மொன்
றாலும், மறைவுறாதொருகுறையுடனன்றுதும
ற்றெங்கும், நிறைவுறாதவை நிகர்த்தென நினை
த்தனன்பிரமம்.......  ..........  ......... ❋

(இதன்பொருள்)

உறைவுறாவிடமின்றெ வியாபியாத விடமில்
ன — — — — இலையென்னும்படியாய்
உறையும் — — — இருக்கின்ற... ...❋
வான் — — — — ஆகாயம்... ...❋
ஒன்றால் — — — ஒன்றினாலே...... ❋
குறைவுறாவகைகண்டு கெடுத லில்லாத வழி
யையறிந்து... ...❋
அதிற்கூறுமொன்று அவ்வாகாயத்திற் றோ
ன்றும் — — — — ன்றுமெனச் சொல்லி
யபூதங்களைந் தினு
ம்...... ... ... ...❋
பிரமம் — — — பிரமமும்...... ... ...❋
மறைவுறாது — — மறைவுபடாமலும்.. ❋
ஒருகுறையுடனன்று - ஒருகுணமு மடையாம
லும்...... ... ...❋
எங்கும் — — — எவ்விடத்தும்... ...❋

[ம்

நிறைவுறுது— —பூரணங் குறையாமலு
அவை— — ——அவ்வாகாயத்தை...*
நிகர்த்தென — —ஒத்ததென்று... ...*
நினைத்தனன்.— —கருத்துட்கொண்டன
ன் ..........(எ-று)

(முற்று-அசை-நிலை.)

(இதன்றாற்பரியம்.)

எங்கும்பரிபூரணமாய் ஒன்றுலுமறைவுப
டாத சைதன்னியத்தை ஆகாயமறிவிக்க அ
றிந்தேனென்பதாம்.... ........ ....... ...*

இவ்விரண்டு செய்யுட்களாலும் ஆகாயத்
தினியல் புணர்க்கப்பட்டதெனவறிக.

(அவதாரிகை.)

(கதிரவனாலறிகின்றவை யினவயெனல்.)

அருவமாமறிவானவனுக்கைகள் பலவும்,ஒரு
வனுகியேயுறதுவனென்பதை புணர்ந்தே
ன், பரிதிவானவனொருவனேயாய்ப்பல்குட
த்தின்,மருவுநீர்தொறுநிழல்பலவாகயுறன்ம
தித்தே.......... ......... ......*

(இதன்பொருள்.)

(அன்வயம்.)

பரிதிவானவன்— ---சூரியனானவன்......*
ஒருவனேயாய்— —ஒருவனேயாகி.....*

பலகுடத்தின் — — அநேகங்குடங்களிலே
மருவுநீர்தொறும் — இருக்கின்றஜலங்க
டோறும்.. ... ...*
நிழல்பலவாயுறல் — விம்பம்பலவாயிருக்கி
ன்றதை... ... ... *
மதித்து— - —இத்தன்மைத்தென்று
நினைத்து... ... .... *
அருவமாம்— ——அரூபமாகியும்... ..*
அறிவானவன்— —அறிவுமயமாகி யிசாநி
ன்றசைதன்னியம்...*
ஒருவனாகியே- - -ஒருவனாயிருந்தே... *
யாக்கைகள்பலவும்- -உடல்கள்பலவற்றிலும்
உறைகுவன்- -வசித்திருப்பன்.... *
என்பதை- - -என்கின்றதை... .*
உணர்ந்தேன்- -அறிந்தனன். (எறு)

(இதன்றாற்பரியம்.)

சூரியனொருவனாயிருந்தும்பலகுடத் துளிரு
க்கின்றநீர்கடோறும்பலவிம்பமாகப்பிரகாசி
க்கின்றதுபோலவே—சைதன்னியமும்உடல்க
டோறுமிருந்துவிளங்குகின்றதென்பதைசூரி
யனாலறிந்ததென்பதாம்... ... ... ... ...*

(அவதாரிகை)

(சந்திரனாலறிகின்றவை யிவையெனல்)

திங்களுடொறும்வளர்தலுந்தேய்தலுந் தெரிக்கிலங்கண்மாநிலம்விளக்கும் வெண்கதிர்க்குணமதனற், றங்குமோராறுவகைவிகாரங்களுந் தமியே, னிங்குநாடினனுடற்கலாலுயிர்க்கிலையெனவே.......... ...... .......... ...*

(இதன்பொருள்.)

திங்கள் — —சந்திரனனவன்... ...
நாள்தொறும் — —மாதங்களெல்லாம் ...
வளர்தலும் — —விருத்தியடைதலையும்.
தேய்தலும் — —குறைதலையும்... ...*
தெரிக்கில் — —தெரிவிக்குமிடத்து[ம்]
அங்கண் மாநிலம் —அதன்றபுவிகளெல்லா
விளக்கும்— —பிரகாசிக்கும்... ...*
வெண்கதிர்க்குண்மத வெள்ளிய கிரணங்களி
னுல்— —ன்குணமாதலால் ...*
தங்கும்— —உடலிலிருக்கும் ... *
ஓராறுவகைவிகாரங்க காமாதி யாறுபகைக
ளும்— —ளும்... ... ... ...*
உடற்கலால்— —அவ்வுடலுக்கே யன்றி
உயிர்க்கிலையென —ஆத்மாவுக்கில்லையென்
று .... ... ... ... *
இங்குநாடினன் —இவைகளாலறிந்தனன்

(இதன்ருற்பரியம்.) (எ-று

சந்திரன் நாடோறும் விருத்தியும் க்ஷயமுமடைந்தபோதிலும், தனது பிரகாசத்திற்குக் குறைவில்லாததுபோல, காமம்- குரோதம்- உலோபம்-மோகம்-மதம்- மாச்சரியம் என்ற அறுபகையும் உடலுக்கேயன்றி உயிர்க்கில்லையென்பதை-மதியாலுணர்ந்தனனென்பதாம்... ... ... ... ... ... ... (௰௧)

(அவதாரிகை.)

(இதுவுமது,)

விளங்குமெய்ப்பொருள்யாக்கை மேவினுமதின்குணங்க, ளுளங்கொடெண்ணிலப் பொருட்கிலையென்பதுமோர்ந்தேன், களங்கமென்பதுமதிக்கிலைகருதுமக்களங்கம், வளங்கொள்பூமியின்சாயையென்பாரதைமதித்தேன்*

(இதன்பொருள்.)

விளங்கும்—— ——பிரகாசியாநின்ற... *
மெய்ப்பொருள்—— ——சைதன்னியம்... ...
யாக்கை—— ——உடல்களிலே... ...*
மேவினும்—— ——இருப்பினும்... ... *
அதின்குணங்கள்—— -அவ்வுடலினது குணங்களை... ... ...*
உளங்கொடெண்ணில் யோசித்துப்பார்க்கில் அப்பொருட்கிலையெ அக்குணமவ்வாத்மாவு

ன்பதும்— — —க்கில்லையென்பதையும்
ஓர்ந்தேன்— —ஆராய்ந்தறிந்தனன். ※

(அஃதெவ்வாறெனில்.)

மதிக்கு— — —சந்திரனுக்கு ... ...※
களங்கமென்பது— —கறையென்பது .... ※
இலை— - —இல்லை ... ... ......※
கருதுமக்களங்கம் —யாவராலுஞ்சொல்லப்படுங்களங்கமேயெவன்றால் ... ... ...※
வளங்கொள்— ——வளப்பத்தைக்கொண்டிராநின்ற... ..... ※
பூமியின்— - —பூமியினது.........※
சாயையென்பார்- —சான்றோர்சாயலென்றுசொல்லுவர்... ...※
அதைமதித்தேன் —அதைஅறிந்துகொண்டேன்.(எ-று.) .... ※

(இதன்றாற்பரியம்.)

சந்திரனைப் போலும் ஆத்மா - உலகத்தைப் போலும் யாக்கை அவ்வுலகச் சாயைபோலும் உடலுக்குண்டாகிய காமாதிகள் ஆகையால்-உடலுக்குண்டாகிய துற்குணம் ஆத்மாவுக் கில்லையென்பதாம்... ... ...... ..(௰௨)

(அவதாரிகை.)

(சமுத்திரத்தாலறிகின்றவையிவையெனல்.)

நிறைவினாடொறுங்குறைவுறவடைந்தடனீர்வ
ந், தலையுநீடிலாகூடினுமதின்குணமடையா
துறையும்வாரிகெம்பீரமுற்றென் பதையுணர்
ந்திங், கிறைவயானுமக்குணங்களையுவந்தியை
ந்தனனல்... ... ... ... ... ......*

(இதன்பொருள்.)

வாரி— — —சமுத்திரம்... ... *
நிறைவில்— — —பெருக்கத்தினின்றும்
நாடொறும் — —எப்போதும்... ... *
குறைவுறவடைந்து —குறைவுபடாதிருந்து.
அடல்னீர்வந்து— —ஆற்றுநீர்முதலிய அன்னியஜலம்வந்து... .*
அலையுநீடிலாகூடினும்... ...ஒலிக்கின்றவக் கடலிற் கலப்பினும்.........*
அதின்குணமடையா—அவ்வடனீரினது குணத்தைத்தான்பெறாது.
கெம்பீரமுற்றுறையு ஆழமும் நிறைவும்பொ
மென்பதை— —ருந்தியிருக்குமென்பதை... ... ... ...*
உணர்ந்து— —அறிந்து..............*
இங்கிறைவ— — —இவ்வுலகத்திற் கிறைவனாகியயெதுமகாராஜ

னே....... ... ... *
யானுமக் குணங்களை-யானுமந்தப் பண்புக்
களை... ... ... ... *
உவந்தியைந்தனன் —மகிழ்ச்சியுடன் பொருந்
தினன்....... ... ... *
ஆல்— — — —அசைநிலை.... (எ-று)
(இதன் றாற்பரியம்.)

[ம்
சமுத்திரந்தனது நிறைவிற்குறைவில்லாமலு அன்னியஜலங்கூடினு மதின் குணத்தைதா னடையா,மலும் தமது பெருமை குறையாம லு மிருக்கின்றமை யறிந்து அதுபோலவே யானுமெனது பூரணங்குறையாமலும் சேத் காதிபிரபஞ்சஞ்சேரினு மவற்றின் குணம்பெ றாமலும் தன்மயமாயிருக்கின்ற தன்மையை ப்பெற்றே னென்பதாம்...............(யக)

(அவதாரிகை.)

(மலைப்பாம்பினாலறிகின்றவையிவையெனல்.
உற்றவுற்றவை முயற்சியின் வருந்திடா துன் னுங், குற்றமற்றநீண்மலையராவென்பதைக் கு றித்திங், கற்றமற்றநல்லறிவினோர்க்கிது வழமெ ன்னப், பெற்றபெற்றன முயற்சியற்றருந்தினே ன்பெரியோய்.... ..... ...... ... .. ...*

(இதன்பொருள்.)

குற்றமற்ற — — பிழையில்லாத... ...
நீண்டமலையரா — — நீண்டமலைப்பாம் பா
னது... ... ....*
முயற்சியின்றி யருந்தி முயற்சிசெய்து வருந்
தாது — — — தாமல்... ... ...*
உற்றவுற்றவை — — தனதருகில் வருகின்ற
வற்றையே... ......*
உண்ணும் — — புசிக்கும்... .... ...*
என்பதைக்குறித்து — என்றுசொல் வதைக்க
ருதி...... ... ...*
இங்கு — — — இவ்வுலகத்தின் கண்...
அற்றமற்றநல்லறி வி அச்சமில்லாதபேரறிவு
னர்க்கு — — — டையோர்க்கு... ...*
இதுவழகென்ன — — இவ்வாறிருத்தலழ கெ
ன்று............ ... *
பெற்றபெற்றன — — யான்பெற்றவள வினை
யே......... ...*
முயற்சியற்று — — — முயற்சியின்றி .....*
அருந்தினன் — — புசிக்கின்றேன்.....*
பெரியோய் — — மேன்மையுடையவரச
னே...... ... (எ-று)

(இதன்றாற்பரியம்.)

மலைப்பாம்பானது - தனது முயற்சியால் வருந்

தாது-இருந்தவிடத்திற்ருனே - தனக்குக்கி டைத்தவற்றைப்புசித்தலும் கிட்டாதபோது சும்மாவிருத்தலும்போலயானுங் கிடைத்தா ல், புசித்தலுங்கிடையாவிட்டால் சும்மாவிரு த்தலும் பெற்றேனென்பதாம்............*

(இதனை அஜகராவஸ்தையென்பர்) யச)

[அவதாரிகை.]

[சுரோத்திரத்தாற்கேடடைந்தமானினாற் ]
[பெற்றவையிவையெனல்.]

மடந்தையர்மொழியுங்கானமுங்கேட்டு மன் னவன்மகன்றுலைமணந்தான், கடந்திரிகலை யின்கோடுபெற்றுயர்ந்தகருதருந்தவ னென க்கேட்டும், மடந்திகழ்மதிமான்வேட்டுவன் கானம்பகர்செவிமடுத்தவன்வலைமேற், கிடந் தனகண்டுவெவ்வினைசகேளேன்கேட்பத நாம கீர்த்தனமே.............................*

(இதன்பொருள்) [அன்வயம்.]

கடந்திரி— —கானகத்திற்றிரிகின்ற*

கலையின்— —கலைமானினது......*

கோடுபெற்றுயர்ந்த -கொம்பினைப் பெற்று யர்ந்த........... *

கருதருந்தவன்- —நினைத்தற்கரிய தவத் தினையுடையகலைக்கோ

ட்டுமாமுனிவன்... ✻

மடந்தையர்— -பொதுமாதர்களினது

மொழியும்— -இன்சொல்லினையும்.✻

கானமும்— — சங்கீதங்களையும்... ✻

கேட்டு— —கேட்டு...... ... ...✻

மன்னவன்— -உரோமபதனென்னு

மரசனது...... ... ✻

மகன்முலைமணந்தா குமரியின் குசத்தைப்

னென— — -பொருந்த விவாகஞ்

செய்தானென... ✻

கேட்டும்— - -கேள்விப்பட்டும்....✻

மடந்திகழ்மதிமான் -அறிவின்மைமிகுந்தபு

த்தியினையுடையமாமு

னது... ... ... ...✻

வேட்டுவன்— -வேடன்... ... ... ✻

பகர்கானம்— -கூவுகின்றஇசையை..✻

செவிமடுத்து— - -காதினிடமாய்க்கேட்டு✻

அவன்வலைமேல்— -அவன்வைத்த கண்ணி

க்குள்ளாக.............

கிடந்தனகண்டும்- —சிக்கிக்கிடக் கின்றதை

ப்பார்த்துமிருக்கின்ற

யான்................✻

வெவ்விசைகேளேன் -கொடியகானங் களைக்

கேளேன்... ... ....*

கேட்பது— - -ஆயின்கேட்கின்ற தெ
துவெளில்... ... *

அநாமகீர்த்தனமே—பிரமத்தின்கீர்த் தனங்
களையாம்... (எ-று)

(இதன்குறிப்பிரியம்.)

சத்தயிந்திரியத்திஞற் கலைக்கோட்டு மகாமு
னிவரும்-மானும்-கெடுதியடைந்ததைநோக்
கிச்சத்தகானங்களை நீக்கி வேதாந்தசிரவணங்
களைக்கொண்டேனென்பதாம் ... ...(௰௫)

(அவதாரிகை.)

(பரிசேந்திரியத்தாற்கேடடைந்த.)

(யானையினலறிந்ததிதுவெனல்.)

துதிதருவயவர்படுகுழிசெலுத்துந்துகளறுபி
டியையுள்ளுவந்து மதகரிதழுவிவயவர்கைவ
சமாய்வயங்குதல் கண்டுமட்டொழுகுந் த
தைமலர்க்குழலார்தனகிரிதழுவித் தனைப்பரி
தாய்மதன்வசமாய் விதலையின்மனமாமயக்
குறுமென்ன விடுத்தனன் புணர்ச்சிபற்றன்
றே... ... ... ... ... ... ... ... ...*

(இதன்பொருள்.)

துதிதருவயவர்- - - -புகழினைத்தரும் யானை
ப்பாகர்........ ...*

படுகுழி - - - - - - இழிந்தேறும் பள்ளத்தில்.................. ...*
செலுத்தும் - - - - விட்டிருக்கின்ற .... *
துகளறுபிடியை- - குற்றமற்ற பெண் யானையை.... ... ...*
உள்ளுவந்து - - - மனமகிழ்ச்சியுடன் ...*
மதகரிதழுவ - - - மதம்பொழியும் ஆணைபோய்தழுவ.... *
வயவர்கைவசமாய் — பாகர்கைவசப்பட்டு *
வயங்குதல்கண்டு - - நடக்கின்றதைப் பார்த்து.............. ...*
மட்டொழுகும்- - தேனொழுகுகின்ற. . *
ததைமலர்க்குழலார்--மலரையணிந்த நெருங்கிய கூந்தலை யுடைய பெண்கள்... ... ...*
தனகிரிதழுவி - - தனமாகியமலை களைத் தழுவி...... ... ...*
தணப்பரிதாய் - - நீங்கற்கரிதாகி... ...*
மதன்வசமாய் - - - மன்மதவேடன் வசப்பட்டு..............*
விதலையின்மனம்-- — நடுக்கத்தினன்மனமானது....... .........*
மாமயக்குறுமெ -— மிகுதியுமயக்கத்தைப்

ன்ன—  —பொருந்துமென்று. ※
விடுத்தனன்—  -நீக்கினன்.......... ※
புணர்ச்சி—  —போகத்தை.... (எ-று)
மற்று—அன்று — எ-அசைநிலை... ...... ※

[இதன்றாற்பரியம்.]

படுகுழியில் பெண்ணானையை நிறுத்திப்பாகர் மறைந்திருக்க வதனை பரிசுகத்தா லாண்யா னையானது போய்தழுவ வப்பாகராற்பிடிக்க ப்பட்டுவருந்துத்தவதாற் பரிசுகத்தால் பெ ண்போகத்தையிச்சிக்கிற்காமவிகாரத்தாலல க்கண்வருமென்று அதைநீக்கின னென்ப தாம்.... ... ... ... ... ... .. யகு

(அவதாரிகை.)

[ரூபேந்திரியத்தாற்கேடடைந்தவிட்டிற்]
[பறவையாலறிந்ததிதுவெனல்.]

ஒளிகொளும்விளக்கினழலுருக் கண்டது னை வுகொளெனவெக்கசுழன்று- விளிவுறும்பசிய பதங்கமுங்கண்டுவெய்யதித் தொழிலெனக்க ருதித், தெளிவுகொண்டுனிவராயினுங்காணி ற்சிந்தைகொண்டனுதினமருந்தக், களிகொ ளுங்கருங்கண்மடந்தையருருவங்கருத்தொடு ங்காண்கிலனம்மா....................... ※

[இதன்பொருள்,]

ஒளிகொளும்விளக் — பிரகாசத்தைக்கொண்
கின் — — —டிருக்கும்விளக்கினது
அழலுருக்கண்டு- —சிவந்தவடிவத்தைக்க
ண்டு... .. ...... ✽
துணைவுகொலென- -இது தனக்காகாரமெ
ன்று... ... ...✽
அதிற்சுழன்று— —அவ்விளக்கிற் சுழன்று
விழுந்து... ... ...✽
விளிவுறும்— —இறந்துபோகின்ற. ✽
பசியபதங்களும்— --பசியவிட்டிற் பறவை
யையும்... .... .✽
கண்டு-- -- —நோக்கி...... ... ✽
தெளிவுகொள்- - --அறிவுடைய ..... ...✽
முனிவராயினும்- - -பெரியோர்களானும்✽
கருங்கண்- - - - - -மையணிந்த கண்ணி
ணையுடைய... ... ...✽
மடந்தையர்- - - --மாதர்களது... . ...✽
உருவம்- -- - ---வடிவத்தை .... ....✽
காணில்-- -பார்க்கில்... ... ...✽
சிந்தைகொண்டு- - -அவ்வுருவினைச் சிந்தை
யிற்கொண்டு... ....✽
அநுதினம்-- --எப்போதும்... ...✽
அருந்த- - - ---அவ்வின்பத்தைக் கொ

ள... ... ... ...*
களிகொளும்--- - --மயக்கங் கொள்ளுமா
தலின்... ... ......*
வெய்யதித் தொழிலெஇச்செய்கை கொடிய
ன க்கருதி--- -- ---தென்று நினைத்து...*
கருத்தொடும்-- -- --மனத்துளேலனும்.. *
காண்கிலன்-- - --- நினையேன்--- [எ-று]
ஈண்டு- அம்மவென்பதுளா
யசைச்சொல்.
(இதன்றாற்பரியம்.)
சட்சிந்திரியத்திலைல்விட்டிற்பறவை யானது
விளக்கிஞெளியையுணவெனக்கருதி யிறந்த
தைப் நோக்கிமாதருடவ்விளக்கினறன் மைய
ராது லினவராற்கேட்டுமென நீக்கின னென்
பதாம்... ...... ...... ... [௰எ]
(அவதாரிகை)
[சிங்குவிந்திரியத்தாற்கெட்டறமீனு]
லறிந்ததிதுவெனல்
வஞ்சநெஞ்சினராய்த்தூண்டிபின்வளைந்தவ
ன்சுவை பூன்பெறவடைந்து- துஞ்சுதலடை
ந்தமீன்குழுக்கண்டு துன்னுமை வகையெனு
ம்வாயுய். பஞ்சரமென்றுற்றுட லுறை வதற்
காப்பக்கனறணிப்பதற்கன்றி, யஞ்சுவையி

ளைவியென்றசையினிணைந்தேயருந்துத லொ
ழிந்தனனடிசில்... ... ... ... ...*

[இதன் பொருள்.]

வஞ்சநெஞ்சினராய்—கொடிய மனத்தையு
டையராகி— ... ...*
வளைந்த தூண்டிலின்—வளைவுகொண்ட தூண்
டின் முள்ளிற்பொருந்
திய— ... ... .... ...*
வண்சுவையூன்——— ———மிக்க சுவையினை யு
டையவூனை... ... ...*
பெறவடைந்து— — ——தானுண்ணவந்து ...*
துஞ்சுதலடைந்த— ——இறந்துபோகின்ற..*
மீன்குழுக்கண்டு-- ———மீன்கூட்டங்களைப் பா
ர்த்து... ... .. ...*
துன்னும்———— — ———நெருங்கிய . . ......*
ஐவகையெனும்வாயு——ஐந்து வகைப்பட்டப
ஞ்ச பிராண வாயுக்க
ளும்... ... ... ... *
பஞ்சரமென்றற்று— —கூடென்றடைந்து. .*
உடல்— —— —— —— ———இவ்வுடலினிடத்து..*
உறைவதற்கா—— — ———இருப்பதற்காக.... ..*
பசிக்கனல்—— ——— ———உதராக்கினியை.... .*
தணிப்பதற்கன்றி— ——ஆற்றுதற்கல்லால்.. *

அடிசில்--- -- -- ---ஆகாரத்தை...... *
அஞ்சுவை யிவை யெஇவையினிமையெ
ன்று-- --- --- --- ---ன்று. ... ... ....*
ஆசையினினைந்து----அன்பொடு நினைவுற்று
அருந்துதலொழித்த புசிக்கின்றதை நீக்கி
னன்-- --- --- -- --- --னன். .... [எ-று]

[இதன்றாற்பரியம்.]

மீன்படுப்போர்- தூண்டின்முள்ளிற்றசை
யைக்கோத்துப், போடவதனையாகாரமென
க்கருதிமீன்கூட்டங்களிறக்கின்றதைப் பாத்
து- வாயுவிவ்வுடலிற்றங்கும்பொருட்டுதாக்
கினிதணிப்பதற்குக்கிடைத்ததைப் புசிப்பத
ன்றி நாவுக்கினிமைதேடாதொழித்தன னெ
ன்பதாம்...... ...... ... ... ௰அ

அவதாரிகை. இதுவுமது.

[வண்டினங்களாலறிகின்றவையிவையெனல்]

வண்டினஞ்சிறிதுசிறிதெனவலருமலர்தோறு
ம்வருமுருகுவப்பா. லுண்டனதிரிதல்கண்ட
னன்யானுமுளைக்கிலித் தொழிலழகென்ன.
வெண்டருநகரின்மனைதொறுங்குறுகி யென
தொருகரமிசையைபங், கொண்டனன்சிறிது
சிறிதென வுவந்து கொள்கலத் தேற்றி
டாதன்றே... ... ... ... ... *

வண்டினம்— —வண்டினங்கள்... ...*
சிறிதுசிறிதெனா— —கொஞ்சங் கொஞ்ச
மாக... ...*
அலருமலர்தொறும்— —அலருகின்றபுஷ்பங்
கடோறும்... ......*
வருமுருகு— — —ஒழுகுகின்றதேனை...*
உவப்பால்— — —மகிழ்ச்சியோடும்... .*
உண்டனதிரிதல்— —புசித்துத்திரிகின்றதை
கண்டனன்— — —பார்த்தனன்... ....*
யானும்— — —நானும்... .........*
உரைக்கில்— — —இதனைச்சொல்லுமி
டத்து... ... .. ...*
இத்தொழிலழகே இவ்வண்டின்செய்
ன்ன— — — —கை நன்றென்று.... *
எண்டருநகரின்— —அநேக நகரங்களில்
விளங்குகின்ற... ...*
மனைதொறுங்குறுகி— —வீடுகடோறுஞ்செ
ன்று... ... ... ..*
கொள்கலத்தேற்றி பிக்ஷாபாத்திரத்தில்
டாது— — — —வாங்காது... ......*
ஐயம்— — — —பிக்ஷையை .. ... .*
ஒருதொருகரமிசை— —ஒவ்வொருகரத்தி
லேயேவாங்கி... ...*

சிறிதுசிறிதெனை — — சிறிதுசிறிதாக. . . . . .*
உவந்துகொண்டனை மகிழ்ச்சியுடன்புசிக்கி
ன் — — ன்றேன். . . . . . . (எ-று)

அன்று-ஏ- அசை

(இதன் சூற்பரியம்.)

வண்டானது மலர்களி லிருக்குந்தேனை சிறிது சிறிதாக வுண்டுகளித்துத்திரிகின்றதுபோலத் தானும் வீடுகடோறுங் கரபாத்திரப் பிட்சை கிடைத்ததை யுண்டு மகிழ்ச்சியாய்த்திரிகின்றனனென்பதாம். . . . . . . . . . . . . . . . . . . (௰௧)

(அவதாரிகை.)

கந்தேந்திரியத்தாற் கேடடைந்த கரும்பினை லறிந்த திஃதெனல்.

ஒருமலை மலையுவந்து - மென்முருகுண்டுறைதருமொரு கரும்பிரவில் விரியிதழ் குவிய மலரகப்பட்டு விளிந்ததுகண்டொருநாளுங் கருதிய நகரி லொருமனை யுறைந்து கவின்பெறு முனைவுவந்தருந்தேன் மருமலர் மகுட கோடிகளிடறு மலர்புனை தருபத யுகத்தோய். . . . . . . . . . . . . . . . . . . *

[இதன்பொருள்.]

மருமலர்மகுடகோ வாசமுள்ளவெத்தி
டிகள் — — — — மாலையப்பொரு

ந்திய வநேககிரீடங்
களை ... ... ...*

இடறும்- - — —இடறுகின்ற ... ...*
மலர்புரை தருபதயுக தாமரைபோன்றபத
த்தோய்-- --- — —ங்களையுடைய எதுமஈ
காராஜனே ... ...*
ஒருமரைமலரையுவ ஒருதாமரைமலரினைவி
ந்து-- — — —ரும்பி... ... ...*
மென்முருகுண்டு- - -மிருதுவானவாசனை
யைக் கிரகித்துக்
கொண்டு ... ... ... *
உறைதருமொருசுரு இருக்குமோர்வண்
ம்பு-- - — — --டானது... ... ...*
இரவில்விரியிதழ் இரவில்விரிந்தவிதழ்
குவிய— — —குவிந்தவுடனே. ...*
மலரகப்பட்டு-- -- --அம்மலரினுளகப்ப
ட்டு... .. ... ...*
விளிந்து--- -- --இறந்து போயினதை.
கண்டு-- -- — ——பார்த்து... .. ...*
ஒருநாளும்-- -- --ஓர்நாளிலேயும்... .*
கருதியநகரில்---- --நினைத்தவூர்களிலிரு
க்கின்ற... ... ...*
ஒருமனை- —- - --ஓரில்லிடத்திலேனும்*

உறைந்து— — —இருந்துகொண்டு... *
உணவருந்தேன்— -புசிப்பைக்கொள்
ளேன்... ....(எ-று)

[இதன்றாற்பரியம்.]

ஒருவண்டானது வாசனையைவிரும்பி உதய முதல் தாமரைப்பூவிலிருக்க அத்தமானத்தி லம்மலர்குவிய வதிலகப்பட்டிறந்ததை நோக்கி யானும் ஒரூரிலே யொருமனையிலாவது நிலையுற்றிராமல் வாயலில் நின்றபடி கிடைத்தபுசிப்பை யருந்தித் திரிகின்றனனென்பதாம்... ... ... ... ... ... ....(உ௰)

[அவதாரிகை.]

சத்தாதிமுதலிய குணங்களுளொவ்வொன்றினாற்கெடுற்றுயிர்க ளிறக்குமாயி னவ்வைந்துமோரிடத்துச் சேருமாயினெவ்வாறுய்வதெனவியந்துரைத்தல்... ... ... ... ... ...*

[வேறு]

முந்தமேயொலியாதியிலொருகுண முன்னிப். பந்தமோடுடறுற்றிறந்தனபலவென்றூ •
லைந்துசேர்குணங்களுமொருங்காசை யினடைந்தோருந்துபோநெறியுண்டுகொலோமதித்துரைக்கில்... ... ... ... ... ... *

இதன்பொருள்.

பூந்தமே— — —மூன்புகூறிய... ...*
ஒலியாதியில்—— —சத்தபரிசரூப ரசகந்த
மாகியவிவ்வைந்து கு
ணங்களில்...... ...*
ஒருகுணமுன்னி——ஒருகுணத்தை நினை
த்து... ... ... ... ...*
பந்தமோடு— — —இனத்துடனே.....*
இடருற்றிறந்தன —துன்பமுற்றழிந்தவை
கள்... ... ... ... *
பலவென்றால்— —அநேகமென்றால்...*
ஐந்துசேர்குணங்க பஞ்சேந்திரியங் களை
ளும்— ——யும்... ... ... ... *
ஆசையின்— — —ஆசையினால் .... ...*
ஒருங்கடைந்தோர் —ஒருமிக்கப்பெற்றோர்.
உய்ந்துபோநெறி —ஞானவாழ்வைப் பெ
றுமார்க்கம்.........*
உண்டுகொலோ— —உண்டாமோ... ...*
மதித்துரைக்கில்— —ஆராய்ந்துசொல்லுங்
கால்....... ... (௭௰)

(இதன்றாற்பரியம்.)

ஒவ்வோரிந்திரியத்தாலொவ்வொரு பிராணி
கேட்டையுமாகிலவ்வைந்துங்கூடி யிருக்கு
மொருவன்-என்னகேட்டையாமென வியந்

துரைத்ததாம்....... ... .... .... (உக)

(அவதாரிகை.)

(வேடனலறிகின்றகுணமிஃதெனல்)

பம்பிருமொறிவழிமனம்பறந்துரு தடக்கி யம்புசெய்ததின்கோணறுத்திருந்தினனவன் போல் வெம்புமைம்புலன்வழிமனம்விரும்பு தல்வெறுத்துக் கம்பமில்லறிவாம் பொருளறி ந்தனன்கருத்தால்....... ... ... ... ... ...*

(இதன்பொருள்.)

பம்பு— — —நெருங்கி யிருக்கப்பட்ட....... ...

இரும்பொறிவழி— —துக்கத்தைத்தருமைம்பொறியின்வழியாக *

மனம்— — —மனமானது... ...*

பறந்துருது— —தொடர்ந்து போகாமல்... ... ... ... *

அடக்கி— —அடக்கிக்கொண்டு...*

அம்புசெய்து— -அம்பைவில்லினிடமாகச்சேர்த்து... ...*

அதின்கோணறுத்து -தன்மனதின் வளைவை நீக்கி........ ... .... *

இருத்தினனவன்போ அவ்வம்பினிடத்து நால்— — — —ட்டினவேடனைப்போ

ல்யானும்... ... ...*
வெம்பும்— —கலங்காநின்ற... ...*
ஐம்புலன்வழி— —பஞ்சேந்திரியங்களின் வழியில்... ... ... *
மனம்— —என்மனமும்... ...*
விரும்புதல்வெறுத்து— இச்சித்துச்செல்வதை யொழித்து........*
கம்பமில்— —அசைவற்றிருக்கும். *
அறிவாம்— —அறிவுமயமாகிய... *
பொருள்— —பிரமத்தை........*
கருத்தால்— —எனதறிவினால்... ...*
அறிந்தனன்— —அறிந்துகொண்டேன்

(இதன்றாற்பரியம்.) (எ-று)

ஒருவேடனானவன் வில்லிலம்பைப் பூட்டி யோர்பறவையின்மேலிலக்குவைத்துத்தன்ம னதுபுறம்போகாமலக்குறியினிறுத்தல் போ லியானுமெனதுமனமானது புலன்வழி செல் லாதுசைதன்னியத்திலக்ஷியம்பொருந்தவேட னலறிந்தேனென்பதாம்......... ... (உஉ)

[அவதாரிகை.]

(கன்னிகையாலறிகின்றவை இம்மெனல்)

தாயுந்தந்தையும்வேற்றொருநகர் வயிற்சார் ந்தனேயுமானதன்மனைத்திறந்தாய் நீழ்

த்த மேயசிறுறவோர்க்குணவருத்துதல் வேண்டித் தூயதாமெழிற்குமரிநெற். குத்துத றுணியா...... ... ... ... ...*

(இதன்பொருள்.)

தாயுந்தந்தையும்- —தாயுந்தகப்பனும்...*
வேற்றொருநகர்வயின் — - — அயலூருக்கு... ...*
சார்நாள்- - —சென்றகாலத்தில்....*
நேயமான- —அன்பினையுடைய...*
தன்மனத்திறம்- —தனதுவிவாகத்தைக்குறித்து... .. ...*
நேரதாய்நிகழ்த்த —தந்தைதாயைநேரிலேகேட்க... ... ..*
மேயசிறுறவோர்க்கு-வந்திருக்கின்றசிறப்புற்றவுறவினருக்கு*
தூயதாமுணவு- —சுத்தமானவுணவினை*
அருத்துதல்வேண்டி -செய்துவிக்கவேண்டுமேயென்று... ...*
ஏழிற்குமரி- - — --அழகுள்ளகுமரியானவள்... ... ...*
நெற்குத்துதறுணியா நெற்குத்த துணிவுகொண்டு.....(எ-று)

[இச்செய்யுள் குளகமெனட்]

[பெயர்பெறும்.] (௨௫)

[அவதாரிகைஇதுவுமது.]

பெரியகைவளையார்ப்பவர்கேட்கிலிப்பேதை
யுரைசெய் நல்குரவுற்றவளென்ப வொன்றுண
ர்ந்தாங் கரியகைவளைகழற்றினளொன்றுவை
த்தனூற் கருதி வெவ்வுரைவருங்கொலென்று
றுழுக்கடிந்தேன்... ... ... ... ...*

(இதன்பொருள்.)

பெரியகைவளை — —நெற்குத்துகை யிற்றனதுகையிலிருக்கும்வளைகளின்...... ...*

ஆர்ப்பு— — —கலீரென்னுஞ்சத் தத்தை... ... ... *

அவர்கேட்கில்— —வந்திருக்கின்றவர் கள் கேட்பாராயின்... *

இப்பேதை— —இந்தப்பெண்... ...*

உரைசெய்நல்குரவுற் தரித்திரமுடையவள் *
றவள்— — —

என்பவொன்று— —என்றுசொல்லு வார்க ளென... ....*

உணர்ந்து— —அறிந்து..... ... *

ஆங்கு— —நெற்குத்துமிடத்தில்

கரியகைவளை — —கையிலிருக்குங் கரியவ

ளாகளை... ... ...*
ஒன்றுவைத்து— —ஒருவளையலை நிறுத்தி*
கழற்றினள்— —மற்றவைகளைக் கழற்றி வைத்தனள்... ...*
அதனால்— —அவளவ்வாறு செய்ததனால்... ... ..*
கருதி— —அதனை ஆலோசித்து*
உறுகுழு— —பொருந்திய சுற்றத்தின் கூட்டத்தால்... *
வெவ்வுரைவருங்கொலென்று— பொல்லாங்கான சொல்வருமென்று.....*
கடிந்தனன்— —அச்சுற்றத்தாரை நீக்கினன். [எ-று]

[இதன்றாற்பரியம்] [கொல் ஆசை நிலை]

தாய்தந்தையிலாதநாளின்மணத்தைக் கோரி வந்த சுற்றத்தாருக்குணவளிக்கத்தனிலைமிலாமையாலெற்குத்தும் போதுகைவளைச்சத்தங் கேட்கிலவரிவளைத்தரித்திரமுடையளென்பரெனக்கருதி வளையைக்கழற்றினமையால் யானும் பாசத்தாராற் றீயசொல்வருமென்றக்குமரியாலறிந்து நீக்கினளென்பதாம்....... ...(உச)

(அவதாரிகை.)

(தேன்வண்டின் குணத்தினையறி)
(கின்றதிஃதெனல்.)

ஊன்றவைத்ததண்டேனுணவிழந்துசூழ்ந்தெ
டுக்க, வொன்றுமற்றவராலுயிருலந்தமை யு
ணர்ந்து. நன்றறிந்துபற்றெறிந்தவர்க்கொன்
றையுநாளைக்கென்றுவைப்பதுதீதெனத்தெ
ளிந்தனனிறையோய்.. ... ... ...*

(இதன்பொருள்.)

ஊன்றவைத்த— — —ஒருவண்டானது நிரம்பவுந்தேடிவைத்த. *
தண்டேன்— — —தெளிவுடையதேனை. *
உணவிழந்து— — —வேண்டியபோது புசியாமலிழந்ததுமன்றி.
சூழ்ந்தெடுக்க— — —அத்தேனைமுழுதுமெடுத்துக்கொள்ள.... *
ஒன்றுமற்றவரால்— —நெருங்கிவருகின்றவர்களரல்...... ... ...*
உயிருலந்தமை— — —உயிர்சாதலை...... *
உணர்ந்து— — —அறிந்து... ... *
நன்றறிந்து— — —நன்மையைத் தெரிந்து...... ... ... *
பற்றெறிந்தவர்க்கு— —அகப்பற்றுப் புறப்பற்றைநீக்கினவர்க்கு.. *

ஒன்றையும்- — -எவ்விதமான பொரு
ளையும்... ... ... *
நாளைக்கென்று- — -நாளைக் கின்றைக் கெ
ன்று... ... ... ... *
வைப்பது- — — -வைத்திருப்பது... *
தீதெனத்தெளிந்த பொல்லாங்கெனத்தெ
னன்- — -ளிவுற்றறிந்தேனன்... *
இறையோய்- — -அரசனே. (எ-று)

[இதன்றாற்பரியம்.

வண்டானது மதுக்களைசிறிதுசிறிதாகத் தே
டிச்சேர்த்துவைத்துத்தானு முண்ணாமலுயி
ரையுமிழத்தல்கண்டுபெற்றிரண்டு மற்றோர்கள்
சண்டதைப் புசிப்பதேயன்றிநாளைக்கென்ப
துதகாதென்றுவண்டினாலறிந்தனென்பதாம்.

[அவதாரிகை.] (உரு)

(புறாவினாலறிகின்ற திறனெனல்.)

நீணிறக்கொடு வேட்டுவன் படுத்தவன் வலைவா
ய்த் தூணிறப்பெடை பார்ப்பினந் துயர்தல்
கண்டனுகித் தானுமுற்றறி பொருபுறவி
றந்தது தன்னை ஞானமுற்றிடுமெனத் தமர்
சிநேகமிங்கொழித்தேனன்... ... ... *

(இதன்பொருள்.)

நீணிறக்கொடு— —கரியவுடலையுங் கொடி

யமனத்தையுமுடைய

வேட்டுவன்— — --வேடனானவன்..... *
படுத்த— -- — —படுத்துவைத்த..... *
வன்வலைவாய்— —வலிய வலையினிடத்து.
தூணிறப்பெடை— -வெண்ணிறமாகியபெ
ண்பறவையும்...... *
பார்ப்பினம்— ---குஞ்சுகளும்... ...*
துயர்தல்கண்டு-- --வருத்த மடைவதை
நோக்கி... ... ...*
அணுகி- --- ---நெருங்கி... ... ...*
அதிற்றானுமுற்று-- --அவ்வலையிற்றானுமகப்
பட்டு... ... *
ஒருபுறா-- --- ---ஓர்புறவானது.... *
இறந்து-- --- ---இறந்து போய்விட்
டது.... .... .... *
தன்றால்-- -- ---அவ்வண்ணமிறந்தபுறா
விறால். (யானும்)
தமர்சிநேகம்--- --பெண்கள் பிள்ளைகள்
பந்துக் களிடத்திலிஷ்
டம்வைக்கில்.. *
உளமுற்றிடுமென--துன்பம்வருமென் று
கருதி... ... ... *
இங்கொழித்தேன்- --அவரிச்சை யைநீக்கி

னன்... ..... (எ-று)

[இதன் தாற்பரியம்.]

வேடன் கண்ணியில் பேடுங்குஞ்சுகளும் வருந்துவதைநோக்கி ஆண்புறாவும் அக்கண்ணியிற்பட்டுத் தானு மிறந்ததை யான்கண்டு பெண்ணுறுபாசத்தாளை நீக்கினனென்பதாம்..*

[வேறு] [அவதாரிகை] [உ௯

(தாசியிலடைகின்ற திருநெனல்)

சோதிமாடந் துலங்குமிதிலைவாழ் பேதையா மொருபிங்கலையென்பவ ளோதுமாசையொழிப்பது நன்றெனக் கோதிலாக்குரு வானது கூறுவாம்... ... ... ... ... ... ...*

(இதன் பொருள்.)

சோதிமாடந் துலங் அழகுடையவீடு களிகும்-- --- --- --ஒளிப்பிரகாசிக்கும் .*

மிதிலைவாழ்-- --- --மிதிலையென்னும்நகரத்தில்வாழ்கின்ற... *

பேதையாமொரு பி பிங்கலையென்னும்பெங்கலையென்பவள்-- --பரிவையுடைய ஒருதாசிப்பெண்ணானவள்*

ஓதுமாசை-- -- --ஆசையென்று சொல்லுவதை... ... ...*

ஒழிப்பதுநன்றென -ஒழித்துவிடுதல் நல

மென்று... ... ...※
கோதிலாக்குருவா -பழுதிலாத குருவாயி
னது-- -- --- --னதை... ... ...※
கூறுவாம்--- --- ---சொல்லுவாம்.[எ-று]
[அவதாரிகை.] [இதுவுமது.] (உஎ)
பேசுகின்றவப்பிங்கலையென்பவ-டாசியாண
லம்விற்குந்தகைமையா--ளாசையாற்பொரு
ளல்குநல்லாடவர்- பூசுசாந்தப்புயம்புணர்
வாளமேரா... ... ... ... ... ... ...※

(இதன்பொருள்.)

பேசுகின்ற- --- ---முன்சொல்லிய...,※
அப்பிங்கலையென்ப அந்தப்பிங்கலை யென்
வள்-- --- --- ---பவளாகிய... ... ※
தாசியாள்-- - -- --பலரும்விரும்பு கின்ற
தாசி... ... ... ※
நலம்-- --- --- --தன்னிடத்திலிருக்குமி
ன்பத்தை... .. ※
விற்கும்--- --- ---பொருளீய்ந்தோர்க்கு
க்கொடுக்கும்... ※
தகைமையாள்-- ---குணத்தையுடையவள்
ஆசையால்--- - --இவளிடத்துண்டாகிய
வாசையினாலே. .※
பொருளல்கும்-- --திரவியத்தைக்கொடுக்

கும்... ... ...*

நல்லாடவர்--- --- --நல்லபுருஷராலுடைய.

பூசுசாந்தப்புயம்- --கந்தாதியள்பூசிய புய

ங்களை ...... ...*

புணர்வாள்- - --- ----அணைவாள்... (எ-று)

அரோ-- — ——அசைநிலை.....(உஅ)

[அவதாரிகை.] (இதுவுமது.)

இன்னவண்ணமிரும்பொருளீட்டுநாள்-சொ

ன்னவண்ணம்பொருள்பெறத்தோய்பவர்-ம

ன்னும்வண்ணமோரல்லில்வராமையா- லன்

னவண்ண நடையளயர்ந்தனள்... ... ...*

[இதன்பொருள்.]

இன்னவண்ணம்— --இவ்வகையாகியவிருத்

தியினாலே . ......*

இரும்பொருளீட்டு மிக்கதிரவியஞ் சேர்க்

நாள்— — ----குநாளில்... ... ...*

சொன்னவண்ணம்—இவள்சொல்லுகின்றப

டியே... ... ... ...*

பொருள்பெற— —திரவியத்தைத் தான்

பெற்றுக்கொள்ளவும்.

தோய்பவர்— - —தன்னையணைகின்றவர்.

மன்னும் வண்ணம்— தன்னொடு கூடியிருக்

கும்படி... ... ...*

ஓரல்லில்—— —— ——ஓரிராத்திரியில் .... *
வராமையால்—— ——வராதபடியினாலே .*
அன்னவன்ன நடை அன்னத்தைப்போலு
யன்— —— —— ——நடையினையுடைய பி
ங்கலையென்பவள்...*
அயர்ந்தாள்-- -- --தளர்வற்றனள் .எ-று
[அவதாரிகை. [இதுவுமது] உ௬
மறுகினூடுவருபவர்யாவரும்- பெறுகநீபொ
ருளென்றுறும்பெட்பொடுங்- குறுகியீந்துட
ன்கூடுவரோவெனச்- சிறுகுமோரிடையார்த்
துளந்தேம்பும்........................ ......*
(இதன்பொருள்-)
மறுகினூடு—— —— ——வீதியினிடமாக... *
வருபவர்யாவரும்- ——வந்துகொண் டிருக்கி
ன்றபேரெல்லாம்...*
பெறுகநீபொருளை நீவாங்கிக்கொள்ளு ப
ன்று—— - ——ணத்தையென்று... *
உறும்பெட்பொடும் -மிகுந்தஆசையுடன். *
குறுகியீந்து—— ——என்னிடத்தில் வந்து
கொடுத்து...... ...*
உடன்கூடுவரோவெ என்றொடுகூடி டணை
ன—— —— - ——வாரோவென்று... ...
சிறுகுமோரிடை- ——ஒப்பற்ற சிற்றிடையி

ணையுடைய பிங்கலையெ
ண்பவள்.......... ...*
ஆர்த்துளந்தேம்பும்-பெருமூச்செறிந்துமன
வாட்டமடைந்துகொ
ண்டிருப்பள். [எ-று)
ஏ- -அசைநிலை- (௩௰)

(அவதாரிகை.) (இதுவுமது.)

நேசமாய்நெடுமாடநிரைபுகு- மாசையாம்வ
ளியாங்குநின்றுந்தலால்-வாசவார்குழன்மீள
மறுகுறு- மூசலாடும்வகையுளமொக்குமே*

(இதன்பொருள்.)

நேசமாய்— — —பொருளில்வைத்தநே
யத்தையுடையளாகி.*
நெடுமாடநிரைபுகும்.ஒழுங்காக வியற்றியநீ
ண்ட மனையிற் புகு
வாள்......... ......*
ஆசையாம்வளி— —ஆசையாகிய காற்றா
னது...... ... ...*
ஆங்குநின்றுந்தலால் -அம்மனையினின்றுந்த
ள்ளுகையால்...... *
வாசவார்குழல்- —மணக்கின்ற நீண்டகூ
ந்தலையுடைடபிங்கலை.
மீளமறுகுறும்- —திரும்பவும்வீதியில்வ

றுவாள் (இவ்வாறு உள்
ளபோவதும் வருவ
துமாகவிருத்தலால். *
ஊசலாடும்வகை- —ஊஞ்சலாடுவது போ
ல...... ... .... ...*
உளமொக்குமே——அவள்மனமொத்திரு
ந்தது [எ-று]ஏ-அசை
[அவதாரிகை.] (இதுவுமது.) (ருக)
வாயினின்றுநடுங்குநடுவிர - வாயதென்றயர்
வெய்தியகம்புகும்- நேயநன்பொருணெஞ்
சினினைத்தழும்- பாயன்மீதுபடுக்கும்பதைக்
குமே...... ... ...... .... ...... ... ...*
(இதன் பொருள்.)
வாயினின்று— —தலைவாசற்படியிடத்
துநின்றுகொண்டு....
நடுவிரவாயதென்று -பாதியிரவாயதென்று.
நடுங்கும்-— — —நடுங்குவள்— - —
அயர்வெய்தி— -வருத்தமுற்று... ...*
அகம்புகும்— - —வீட்டிற்குட்புகுவள் *
நேயநன்பொருள் —இனியபொருள் மேலு
ம்பேறும் வாராமை
யால்.......... ......*
நெஞ்சினினைத்தழும் -மனதினினைத்துநினைந்

ஏங்கு— — — —எவ்விதமாக... ...*
உவகையுண்டாகும்—சந்தோஷ முண்டா
கும்.... (எ-று) (ருச)

[அவதாரிகை.] (இதுவுமது.

உன்னிற் போதவுருவத்தலைவனுண்- மன்னிப்
போகம்வழங்கிவதியவு. மின்னைப்போல்விளி
நாதனைவித்தொறுத்-தென்னைப்போலயர்வா
ரொவருண்டரோ...... ... ... ... ... *

(இதன்பொருள்)

உன்னில்— — —நினைத்துப் பார்க்குங்
கால்... ... ......*
போதவுருவத்தலை அறிவுருவாகிய நாய
கன்— — — — —கன்... .. ... ...*
உளமன்னி— — ---உள்ளத்தி னிலைபெற்றி
ருந்து... ... ...*
போகம்வழங்கி— --அநுபோகத்தைஈந்து
வதியவும்— — — ---வாசமாயிருக்கவும்..*
மின்னைப்போல் விளி-மின்னலைப்போற் பிற
ந்திறக்கப்பட்ட... *
நாதன்— — — --ஒரு புருஷனுவனா
லே... ... ... ...*
நைந்து— — — --நலியப்பட்டு... ...*
ஓறுத்த— — — ---அலைந்து... ..... ...*

என்னைப்போல்-- --என்னைப்போல.... *
அயர்வார்-- -- ---தளர்ச்சியடைந்தவர் *
எவருண்டு-- -- ---யாவரிருக்கின்றார்கள்.
ஏ-று- அரோ அசை

(அவதாரிகை.) இதுவுமது. ரு௬
சலத்தைத்தையுந் தசையென்பொடுசாற்றும்மு-ம
லத்தையும்மயிர்த்தோலின்மறைத்ததை- நல
த்ததென்று நயந்து நலித்தவென்- புலத்தை
யென்கொல்புகலப்பெறுவதே.... ... ...*
(இதன்பொருள்.)
சலத்தையும்- — --நீரினையும்... .. ....*
தசை-- -- -- - --மாமிசங்களையும்....*
என்பொடு-- -- --என்புக்களுடனே...*
சாற்றும்-- -- --சொல்லுகின்ற......*
மும்மலத்தையும் —மூவிதமானமலங்களை
யும்— — - —
மயிர்— — - - - - -மயிர்களினாலேயும்- -
தோலின்— — - - -சருமங்களினாலேயும்-
மறைத்ததை— — - -மறைத்து வைத்திருக்
குந்தேகத்தை.......*
நலத்ததென்று— - -நன்மைத்தரத்தக்கதெ
ன்று... ... *
நயந்து— — -ஆசைப்பட்டு...... *

நலிந்தவென் — —மெலிந்தவெனது... ✻
புலத்தை— - —அறிவை... ... ✻
யென்சொல்— -என்னென்று.. .... ✻
புகலப்பெறுவது— -சொல்லப்பெறுவது ✻
ஏ-அசை-சொல்- -ஐயத்தின்கண்வந்தது.
(எ-று) ௬௯—

அவதாரிகை. இதுவுமது.

என்றுகூறியவேந்திழை பீறிலா-தொன்றுமா சையொழித்துவப்பெய்தினள்- என்றுயானவ் வகையறிந்தாசையை- வென்றிவீரவிடுத்தன ன்வேமராடும்........................ ✻

இதன்பொருள்.

என்றுகூறிய— - -இவ்வண்ணமாகச் சொல்லிய......... ✻
வேந்திழை. —பிங்கலையென்னுந்தா சியானவள்......... ✻
ஈறிலாது- —முடிவில்லாமல்- - -
ஒன்றுமாசை- - -பொருந்தியிருந்த ஆசையை.......... ✻
ஒழித்து- - -தவிர்த்து.......... ✻
உவப்பெய்தினள்- -மகிழ்ச்சியடைந்தாள். ✻
அவ்வகையறிந்து -அவளாசைநீக்கிய வழியையறிந்து......... ✻

யான் - - -நானும்......... ...*
ஆசையை- --ஆசையினை..........*
அன்று- - -அந்நாளே... ......*
வேரொடும்விடுத்த அணுவுமில்லாது நீக்கி
னன் - - - - -னன்... ... ... ... *
வென்றிவீர- - -வெற்றியுடைய எதும
காராஜனே.... எ-று

(இதன்றாற்பரியம்.)

ஒருகணிகையானவள்தினமும் பெறுந்திரவி யமொருநாளிரவிற் பெறுமையாலவள்தான டைந்ததுன்பத்துக் கேதுவாகியவாசையை அறிவாகியகருவியினாலறுத்தின்ப முற்றதை யானறிந்து அம்மாதினைலெனதாசையைநீக்க வறிந்தேனென்பதாம்...... ....... ...(ருஎ)

(அவதாரிகை.)

( அன்றிற்பட்சியாலறிகின்றதினைதெனல்.)

அன்றி லூண்கவர்ந்தந்தாரத்தேதகுநீ - துன்று
மோர்புட்டுரந்துபறித்தலு- மொன்றவ்வூணை
யொழிந்துவப்புற்றதா- லென்றுமோர்பொ
ருளுற்றிடருற்றிலேன்........ ... ..... ......*

(இதன்பொருள்.)

அன்றில்— - —ஓரன்றிற் பட்சியான
து... ... ... *

உளன்கவர்ந்து- — தசையை யெடுத்துக் கொண்டு... ... ...*
அந்தரத்தேகுழி- —ஆகாயமார்க்க மாகச் செல்லுமிடத்து... *
துன்றுமோர்புள்- —அவ்வண்வந்த மற்றோர் பறவையானது... *
தூரந்துபறித்தலும் -வலுமையுடன்பறித்துக்கொண்ட மாத்திரத்தில்.......... ... ...*
ஒன்றவ்வூனை- — தான்பற்றிய தசையை
ஒழிந்து- — விட்டொழித்து... *
உவப்புற்றதால்- — களிப்பினைப் பெற்றபடியால்...... ......*
என்றும்- — எப்போதைக் கும் நான்... ... ... *
ஓர்பொருளூற்று- — ஒருபதார்த்தத்தி லாசைவைத்து........*
இடருற்றிலேன்— — துன்புறுகின்றிலன்..*

(இதன்றாற்பரியம்.) எ.று

ஓர்பக்ஷிதனக்கான இரையைத்தேடி யெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச்செல்லுகையில் மற்றோர்வலியபட்சி யதனைப்பறித்துக்கொள்ள இதுஒழிவுபொருந்திக்களிப் புற்ற

மையால்- யானுமற்றோர்பொருட்களிற் பற்றுதலற்றதவ்வன்றிற் பக்ஷியாற்பெறப்பட்டதென்பதாம்........ ... ... ... ... (௫௮).

(அவதாரிகை.) நாகத்துறவறி

(கின்றதிஃதெனல்).

சுற்றின்மேவியதொல்கறைபான்புரி-புற்றின்
மேவுபுயங்கமென்றோர்ந்தபி - னுற்றுயானு
ஞற்றேன்மடமூர்தொறு- மற்றுளோர்செய்
மதிற்குகைவைகுவேன்........... ......✻

(இதன்பொருள்.)

சுற்றில்மேவிய- —புற்றினதுபக்கங் களி
லிருக்கின்ற...... ✻

தொல்— —பழமையாகிய......✻

கறைபான்புரி- —செல்லுகள் கட்டாநி
ன்ற.............. ✻

புற்றில்- - - —புற்றுக்குள்ளாக... ✻

புயங்கம்— - —நாகப்பாம்பானது. ✻

மேவுமென்று- —இருக்குமென்று... ✻

ஓர்ந்தபின்— - —அறிந்தபின்பு......✻

யானுற்று— - —யானும்பாம்பினைப்
பார்த்து...... .... ✻

மடமுஞற்றேன்- —மடாலயங் கட்டுவ
தொழித்தேன்... ✻

ஊர்தோறும் — —ஊர்களிலெல்லாம்..*
மற்றேோர்- —இருக்கின்ற இல்லறத்தார்......... ...*
செய்- — —செய்துவைக்கின்ற..*
மதிற்குகை — —மதில்சூழ்ந்த சாவடிசத்திரங்களில்... ...*
வைகுவேன் — —வாசம்பண்ணுவேன்*

(இதன்றாற்பரியம்) (எ-று)

பாம்பானது தனக்கோரிருப்பிடஞ் செய்துகொள்ளாது கறையான் செய்யும்புற்றில்வாசஞ் செய்வதைநோக்கியானு மற்றோர்கட்டிய பொதுச்சாவடிசத்திரங்களிலிருப்பது பாம்பினாலறிந்தேனென்பதாம்..............(கூக)

(அவதாரிகை.) (நூலிழைக்குஞ்சிலந்தி)
(யாலறிகின்றதிஃதெனல்.)

நுண்ணிதானசிலம்பியுண்டாக்குநூ- னண்ணியேயுறைந்துண்பதைநாடியா—னெண்ணிலாவுயிர்தந்தவையேய்ந்துறைந் - துண்ணுமோர்பொருளேயென்றுணர்ந்தனன்... *

(இதன்பொருள்.)

நுண்ணிதான — —நுட்பமாகிய.... ...*
சிலம்பி— — —சிலந்திப்பூச்சியானது
உண்டாக்கும்- —தானுண்டாக்கின்ற.*

நூல் — — நூலினிடத்திலே ... *
நண்ணியே — சேர்ந்து... ... ... *
உறைந்து — — வாசஞ்செய்து... *
உண்பதை — அந்நூலைப்பின் பருந்துவதை... ... ... *
நாடியான் — — நான்பார்த்து... ... *
எண்ணிலாவுயிர் — எண்ணப்படாத ஆத்மகோடிகளை ... ... *
தந்து — — படைத்து... ... *
அவையேய்ந்து — அவ்வுயிர்களோடும் பொருந்தி இரக்ஷித்து.
உறைந்து — உயிர்க்குயிராயிருந்து... ... *
உண்ணும் — — தன்னுள் அவைகளைக் கொள்ளும். *
ஓர்பொருளையென்று — ஒன்றாகிய பிரமமே யென்று... ... *
உணர்ந்தனன் — அறிந்தேன். [எ-று] *

[இதன் றாற்பரியம்]

சிலந்திப்பூச்சியானது தானே நூலிழைத்து அதிலிருந்து காத்துத்தன்னிடத்திற்றானே கிரகித்துக்கொள்வதைநோக்கி - இதுபோலப் பிரமமும் உயிர்களையுண்டுபண்ணி அதிலிரு

ந்து இரட்சித்துமுடிவில் தன்னிடத்திலைக்கிய
ம் பண்ணிக்கொள்ளுமென்பதை யறிந்தவெ
ன்பதாம்............................................(௪௰)

(அவதாரிகை.)

[சிறுவராலடைகின்றதிஃதெனல்.]

மானமோடவமானமடைந்திடா - தூன நீங்கி
யுவந்தசிறுவனே - தேனுலாந்தொடையோய்
முனஞ்சேர்ந்ததால் - யானுமோகையுற்றென்
னவையற்றனரோ.........................................*

(இதன்பொருள்.)

மானமோடு — —குறியைத் துகிலால்மறைக்கின்றமானமுடனே..................*

அவமானம் — —துகிலுடாமற் றிரிகின்ற அவமானமும்... *

அடைந்திடாது - —அடையாமல்... ...*

ஊனநீங்கி — —ஈனநீங்கி.............*

உவந்த — —மகிழ்ச்சியடைந்த... *

சிறுவனே — —சிறுபிள்ளையை.....*

முனம் — —முன்னமே... ....*

யானுஞ்சேர்ந்ததால் - - நானுமறிந்தபடியினாலே.... ... ... ...*

நவையற்று — —மானவமானமென்னு

ங்குற்றத்தினின்று... *
ஒழிகையுற்றேன்— —திகம்பரியாய் மகிழ்ச்சிய
டைந்தேன்... ..... *
தேனுலாந்தொடை தேன்பொழியும்புஷ்ப
யோய்— — —மாலையைத் தரிக்கும்
யெதுமகாராஜனே. *
(எ-று) அரோ -அசை
(இதன் தாற்பரியம்.)
சிறுவர்பரிவையுமானமின்றித் திரிதலைநோக்கி
யானுந் திகம்பரியா யவ்வாறுதிரிதலையடைந்
தேனென்பதாம்.. ... ... ... ...(௬௧)
[அவதாரிகை.]
(குளவியெடுத்தபுழுவினுவமைகின்றது.)
திஃதெனல்.
ஈங்கரிந்தனன்யானுற்றெடுத்தொரு - பாங்க
மைத் துப்பாரிவிற்பறந்தய- லீங்கும்வண்டை
தினைத்தபசும்புழு-வாங்கவ்வண்டுருவானதுக
ண்டரோ.............................. *
(இதன்பொருள்.)
உற்றெடுத்து— —— இளம்புழுவைப் பொ
ருந்தவெடுத்து... ...*
ஒருபாங்கமைத்து——ஒரு மட்கூண்டி னிட
மாகவைத்து... ... *

பரிவில்— — —அன்புடனே... ...*
பறந்து— — —பறந்து... ... ...*
அடனீங்கும்வண்டை-புறம்பே நீங்கிப் போன வண்டினை... ....*
நினைத்தபசும்புழு——மறவாது நினைத்திருந்த எளியபுழு.........*
ஆங்கு— — —அக்குடம்பைய யிடத்தே... ... ... ...*
அவ்வண்டுருவானது அவ்வேட்டுவ னுருவ
கண்டு— — —மானதை நோக்கி...*
யானீங்கறிந்தனன் —நானிவ்வண்ணத்தைய றிந்தேன்... ..(எ-று)

[இதன்றாற்பரியம்] அரோ-அசை-
ஓர்வண்டானதொருபசும்புழுவையெடுத்தோர்குடம்பைக்குள் வைத்தொருகொட்டுக்கொட்டி கூட்டின்புறம்பேபறந்துசென்றபாடவவ் வண்டினை நினைவின்மாறாது நினைந்தபூழுவவ்வண்டானதுபோல யானும் பிரமத்தையே நினைந்து அதுவானேனென்பதாம்......(௬௨)

[அவதாரிகை.]
(எவ்விதத்தாலாயினுமுயிர்களின்பமட)
(டையவேண்டுமெனல்.)
ஆன்றியாயினு மாசையினாயினும்-வன்பயத்

தின்வயிரத்தினாயினும் - நன்பெருந்திருநாத
னையே நினைந் - தின்பமவ்வுயிரெய்துவவென்
பவே.... ... ... ... ... ...*

(இதன்பொருள்.)

அன்பினாயினும் — -அன்பினாலேனும்...*
ஆசையினாயினும் — -அபேக்ஷையினாலேனும்... .. ......*
வன்பயத்தின் — —வலியபயங்கரத்திலேனும்... ... ..... ...*
வயிரத்தினாயினும் —வைராக்கியத்தினாலேனும்... ... ... ...*
நன்பெருந்திருநாத நன்மைமிகுந்தபெருஞ்
னையே — — — ஞானசெல்வக்கடவுளை [யே
நினைந்து — — —நினைவுற்று......
இன்பம் — — ——பேரின்பத்தை......*
அவ்வுயிர் — — --அவ்வுயிர்களெல்லாம்
எய்துவ — --- ——அடையவேண்டியது
என்ப-- -- -- ——என்றுசொல்லுவர்..*
(எ-று) ஏ- அசைநிலை

[இதன்றாற்பரியம்.]

எப்பொருட்குமேலாயவிறைவனையெவ்வகை
யினாலாவது சகலவுயிர்களும்நினைந்து பேரி
ன்பத்தைப்பெறவேண்டுமென்றுணர்த்ததாம்

[அவதாரிகை.] (௬௩)

[இத்தனைக்குமாதாரமாகிய தேகத்தா]
லாகிய திறமெனல்.

வாக்கினைக்கடந்தோங்கிமற்றெங்கணு-நீக்கமி
ன்றிநிறைந்தவறிவினை- யூக்கமுற்றுணர்தற்கி
டமாதலி-ஞக்கையுங்குருவானதரசனே...*

(இதன்பொருள்.)

வாக்கினைக் கடந்தோ மனவாக் குக்கெட்டா
ங்கி— — — —உயர்ந்து.........*
மற்றெங்கணும்— —எந்தவிடத்தும்.....*
நீக்கமின்றி— — —நீக்கமில்லாமல்......*
நிறைந்தவறிவினை— —பரிபூரணமாகிய பேர
றிவை..............*
ஊக்கமுற்று— — —முயற்சிசெய்து.....*
உணர்தற்கு— — —அறிதற்கு...........*
ஆக்கை— — — —இவ்வுடலானது.....*
இடமாதலின்— — —ஆதாரமாதலால்.....*
குருவானது— — —உடலுங்குருவாயினது
அரசனே— — —ஏதுமகாராஜனே...*

[இதன்றாற்பரியம்] (எ-று)

முன்னறிந்த இருபத்துநான்குகுருவுடனே,எ
ங்குநிறைந்த பரிபூரணவறிவையறிதற்கிடமா
கியவிவ்வுடலுமோர்குருவாயிற்றென்பதாம்.

யாக்கையுமென்றது-ஈண்டெச்சவும்மை. சசு

[அவதாரிகை.]

[மானிடதேகத்தின்பெருமையைவிய]

ந்துரைத்தல்.

உடல்விரித்தமரைமலர்வைகுவோன் - சடம
னைத்தையுந்தந்துழுவந்தில- னிடரறுக்குமெ
ன்றெண்ணிநன்மானிட- ருடல்படைத்தபின்
னுவகையுற்றான்மூனம்....... ........ ...... ...*

(இதன்பொருள்.)

மூனம்— — — —ஆதிசிருட்டியில்....*
மடல்விரித்த— ----இதழ்விரிந்த... ....*
மரைமலர்வைகு தாமரைமலரில்வாழ்கி
வோன்— — ---ன்றபிரமதேவன் ...*
சடமனைத்தையும்— -சகலஜீவராசிகளுடலை
யும்... .... .... ....*
தந்துழுவந்திலன்— -படைத்தும்பிரயோச
னமின்றென்று களிப்
படைந்திலன்... ...*
இடரறுக்குமென்று--துன்பத்தை நீக்குமெ
ன்று... ... ... ... ...*
எண்ணி— --- -- --நினைத்து... ... ...*
மானிடருடல்— ----மானிடதேகத்தை...*
படைத்தபின்--- -- --சிருட்டித்தபின்பு...*

உவகையுற்றான்—— ——சந்தோஷ மடைந்தனன்,...... ...(எ-று)

[இதன்றாற்பரியம்.]

பிரமதேவன் ஆதியில் அறிவில்லாத வுயிர்களைப்படைத்தலுத்து- ஆறறிவுடையமானிடரைப்படைத்துவப்படைந்தானெனவே- சத்தப்பரிசரூபரசகந்தமாகிய வைந்தறிவும்பகுத்தறிவொன்றுமாக ஆறினுலும்பிறவித்துன்பத்தையறுக்குமிவ்வுடலெஷ்பதாயிற்று...*

[அவதாரிகை.] (சரு)

அரிதாகிய மானிடயாக்கையைப்
பெற்றபின் விரைவிலதற்கு
ள்ளபிரயோசனத்தைப்பெறவேண்டு
மெனல்.

மாந்தராக்கையிம்மானிலத்தெய்துதல்- வேந்தர்வேந்தமிகவரிதாயினுங்- காய்ந்தகண்ணின்மன்னைகைப்பட்டிறக்குமுன்-ஹைந்துசீலத்தமரீதனன்றாகுமே... ... ... ... ......*

(இதன்பொருள்.)

வேந்தர்வேந்த—— ——இராசர்க்கெல்லா மிராசனே... .. ......*

இம்மாநிலத்து-- ——இந்தப்பூமியினிடத்து மாந்தராக்கை யெய்து மானுடதேகம் பெறு

தில்-- -- -- -- --வது... ... ... ...*
மிகவரிதாயினும்-- --மெத்தவுமருமையாயி
னும்.... ... ... ...*
காய்ந்தகண்-- -- --அக்கினிச் சுடர்போலு
ங்கண்ணிணையுடைய.*
இடன்கைப்பட்டு-- --இயமராசன்கையிலகப்
பட்டு... ... ... ...*
இறக்குமுன்-- -- --இவ்வுடலழிவதற்கு மு
ன்னமே... ... ...*
ஆய்ந்து-- -- -- --ஆராய்ந்து... .....*
சீலத்தமர்தல்-- -- --அறிவுமயமாயிருத்தல்
நன்றாகும்--- -- --நன்மையாம்...(எ-று)

[இதன் றாற்பரியம்.]

இடைத்தற்கரிய மானிடதேகங் கிடைக்குமா யின் காலனாலிறுதியடையுமுன் விவேகஆரா ய்ச்சியினாலே பேரறிவு பெறுத நன்மையெ ன்பதாம்... ... ... ... ... ... ...[௬௪]

[அவதாரிகை.]

இந்தத்தேகம் பிறத்தற்கும்பிறத்தற்கு மாகை காரணமாதலால்... ... ... ... ......*

(அதனை நீக்கவெண்டுமெனல்.)

உறக்கமும்விழிப்புமறுந்தன்மைபோற்-பிற க்குமாந்கையிறக்குமெய்ப்பெட்டுபோற்-பிற

க்குமாக்கையுமெய்ந்தூபிறத்தலிற் - றுறக்க
வேண்டுமெய்யாசையைச்சூழ்ச்சியோய்...*

[இதன்பொருள்.]

உறக்கமும்— —நித்திரையும்........ *
விழிப்பும்— —விழித்தலும்........ *
உறும்— — —பொருந்திவருகின்ற *
தன்மைபோல்— —தன்மையைப்போல *
பிறக்குமாக்கையிற பிறக்கின்றவுட லிறக்
க்கும்— — —கும்............ *
மெய்ப்பெட்டொடு உடலிலாசையுடனே *
ம்— — .

இறக்குமாக்கையும்—இறக்கின்றவுடலும்.. *
எய்ந்தூபிறத்தலில் —மீட்டும்பிறக்கின்றதா
கையால்........ *
மெய்யாசையை— —உடலில்வைத்திருக்கின்
றஆசையை....... *
துறக்கவேண்டும்— —முழுவதுநீக்க வேண்
டும்....... *
சூழ்ச்சியோய்— —அறிவுடைய ஜனகமகா
ராஜனே. எ- று

இதன்றாற்பரியம்.

உறக்கமும்விழிப்பும்போலப்பிறப்புமிறப்பும்
இயற்கையாயுடலுக்கிருக்கின்றதற்குகாரணம்.

ஆசையாகையாலவ்வாசையை நீக்கிற் பிறப்பி றப்பைக்கடந்துசாயுச்சியம்பெறலாமென்ப தாம்............................ ......... (௬௭)

(அவதாரிகை.)

ஏதுமகாராசனுடனேதத்தாத்திரையமுனி வர் இவ்வண்ணமாகவுரைத்ததென்றுரைத்தல்.

இத்திறமேதுவென்பானம் மெழிற்குலத்தி றைவன்கேட்ப வத்திரிபுதல்வனென்னவறை தருந்தவத்தின்மிக்கான் சித்துருவானதத் தாத்திரையன்முன்செப்பினனென் றுத்தவர் க்காழிமாயனுவந்துலாயாடினனே... ...*

(இதன்பொருள்.)

இத்திறம்— ---இப்போது சொல்லிவ ந்தகுணங்களெல்லாம்

ஏதுவென்பான்-- --ஏதுவென்று சொல்ல ப்பட்டவன்... ... *

நம்மெழிற்குலத்தி றைவன்-- நம்முடைய குலத்திற் ---ஸ்ரேஷ்டிய அழகுடை யவரசனானவன்... *

கேட்ப- ---கேட்க... ... *

அத்திரிபுதல்வனென் ன— ---- அத்திரிமகாரிஷியின் -புத்திரனென்று... *

அறைதரும்-- --சொல்லப்பட்ட... *

# அவதூதசம்வாதம்.

தவத்தின்மிக்கான்— —தவத்தின்மிகுந்தவன்.
சித்துருவான— —அறிவுருவாகிய ... ※
தெத்தாத்திரையன்— —தெத்தாத்திரையரானவர்... ... ※
முன்செப்பினனொ ன்று— — —முன்னாலே சொன்ன ஒன்று... .. ... ※
உத்தவர்க்கு— —உத்தவனென்பவர்க்கு.
ஆழிமாயன்— —சக்ரதரராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி..........※
உவந்துரையாடினான். மகிஷியுடனுபதேசித்தார்........... [எ-று]

## இதன்றாற்பரியம்.

நம்முடையகுலத்திற்றோன்றிய யதுமகாராஜன்கேட்கஅத்திரிரிஷிபுத்திரனான தெத்தாத்திரையமுனிவர்சொன்னொன்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் உத்தவருக்குச்சொல்லியதாம்.................................... (சஅ)

முற்றிற்று.